முருகப்பெருமான் துணை

**மகான் சாக்கியர் நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**23.07.2022**, சனிக்கிழமை

1. ஞானப்படை கொண்ட அரங்கா
ஞானிகள் துணை கொண்ட அரசா
தானதரும மகா பலத்தோடு
தரணி காக்க அருளும் தேசிகா
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் அருளாசி தன்னை
ஆசிபட சுபகிருது நள்ளி திங்கள்
அறிவிக்க சப்தம திகதி காரி வாரம்
(சுபகிருது வருடம் ஆடி மாதம் 07 நாள், 23.07.2022 சனிக்கிழமை)
3. வாரமதில் சாக்கியர் நாயனாரும்
வழங்குவேன் உலக நலம்பெற
சோரமிலா ஞான பூமியாக
சுத்தநெறி வழி உலகம் மாறிட
4. மாறிட அரங்கமகான் காட்டும்
மார்க்கம் வழி மக்கள் வந்து
அறமுடன் தரும நெறியை
அனைவரும் பின்பற்றிவர
5. வருகவே நிலைமைகள் மாறி
வருமுலகம் ஆற்றல் நிரம்பிட
ஆறுமுகனார் வழிபாடு பெருகி
அனைவருக்கும் ஞான சித்தி
6. சித்திகள் கூடி உலகமெங்கும்
சித்தர்கள் பூசை பெருகி
உத்தமமாய் ஞானிகள் வெளிப்பாடும்
உயர்வாகி உலகம் அமைதி பெறும்
7. அமைதி மிக்க பாதுகாப்பு கொண்ட
ஆளுமைகளாகி உலகம் மாறி
அமைதிபட ஞான ஆட்சி
அகிலமெங்கும் அமையும்
8. அமையவே அதுமுதலாகவே
ஆபத்து பேரிடர் ஏதுமிலா
அமைந்து இயற்கை வளமும்
அளவிலா பொருள்வளமும்
9. வளமுடன் தேவைகள் யாவும்
வகைபட நிறைவேறும்படி
பலமான ஆளுமை திடமுடன்
பழுதான பின்னடைவு ஏதுமின்றி

10. இன்றியே வளர்ச்சி காணும்
எங்கும் இறைபலமாகி
நன்றான செயல்வடிவாக
ஞான ஆட்சி மலரும்

11. மலரும் ஞானிகள் ஆட்சி
மலரும் மக்களை காத்து
வளரும் உலகம் மாற்றமாக
வழங்கிய அருளாசி முற்றே

–சுபம்–